# ஆசிரம் சேரிடபிள் டிரஸ்ட்
# குழந்தைகள் இல்லம்

சைட் எண்.67 & 68, கற்பக விநாயகர் நகர்
SNMV கல்லூரிச்சாலை
மலுமாச்சம்பட்டி, கோயமுத்தூர் 641 050
தொலைபேசி : +91 9843011371
மின்னஞ்சல் : h.r@ashramcharitabletrust.org
gandhi@ashramcharitabletrust.org
வலைமனை: www.ashramcharitabletrust.org

---

**நிறுவனத்தைப் பற்றி**

ஆசிரம் சேரிடபிள் டிரஸ்ட் அறக்கட்டளையானது 2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டது.

பல்வேறு சமூக, பொருளாதார, மருத்துவப் பிரச்சினைகளினால் அல்லல்படும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள குழந்தைகளுக்குச் சிறந்ததொரு வாழ்க்கையை அமைத்துத் தர இந்த அறக்கட்டளை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மாற்றுத் திறனாளிக் குழந்தைகளின் மறுவாழ்வுக்கான சேவைகளைச் செய்வதற்கெனத் துவக்கப்பட்டுள்ளது.

இதன் மேலாண்மை அறங்காவலர் திரு H. ராமகிருஷ்ணன் ஓமன் நாட்டின் மஸ்கட்டில் பணிபுரிகிறார்.

**நோக்கம்**

தரமான உணவு, உடை, உறைவிடம், கல்வி, மருத்துவ வசதி ஆகியவை தேவைப்படும் குழந்தைகளுக்கு இலவசமாக அளிக்கவும், அவர்களது மறுவாழ்வுக்குத் தேவையான பணிகளை மேற்கொள்ளவும் இந்த அறக்கட்டளை ஆவன செய்யும்.

## குழந்தைகள் இல்லம் பற்றி...

கோயமுத்தூர் நகரிலிருந்து சுமாா் 15 கி.மீ. தொலைவில் உள்ள மலுமாச்சம்பட்டி கிராமத்தில் கட்டடத்திற்கான நிலம் வாங்கப்பட்டு, 2010-2011ல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

தற்போது குழந்தைகள் இல்லத்தை நிா்வகிப்பவா், சமூகப் பணியில் சுமாா் இருபது வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திரு V.S. காந்திநாதன் ஆவாா். அவா் மேலாண்மை அறங்காவலருடன் இணைந்து அறக்கட்டளையின் நோக்கங்களைச் செயல்படுத்துகிறாா்.

மாற்றுத் திறனாளிகள், அனாதைக் குழந்தைகள், சமூகத்தில் உரிய இடமற்று அல்லல்படும் குழந்தைகள் ஆகியோரை இந்தக் குழந்தைகள் இல்லம் ஏற்றுக் கொண்டு பராமரிக்கிறது. தற்போது 20-25 குழந்தைகள் வரை பராமரிக்கத் தேவையான வசதிகள் இந்த இல்லத்தில் உள்ளன. கீழ்க்கண்ட வசதிகள் குழந்தைகளுக்குக் கிடைக்குமாறு செய்துள்ளோம்.

- மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்குத் தேவையான தரமான சேவைகள்.
- 3லிருந்து 10 வயது வரை சிறப்புக் கவனம் தேவைப்படும் மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கான கல்வி.
- இயன்முறை மருத்துவம், மருத்துவ உதவி, உபகரணங்கள் / உதவிகள் வழங்குதல், பேச்சுப் பயிற்சி, கைவினைப் பொருட்கள் பயிற்சி.
- மாற்றுத் திறன் குழந்தைகளை ஊக்குவித்து அவா்களது திறமைகளை வெளிக் கொணா்ந்து சுயமாகச் செயலாற்ற வைக்கத் தேவையான கல்வி மற்றும் பயிற்சியை இக்குழந்தைகள் இல்லம் அளிக்கிறது.

## பணியாளர்கள் / தொழில்முறை அலுவலர்கள்

ஒரு சமூகப் பணியாளர், ஒரு வருகை மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சிறப்புப்பள்ளி ஆசிரியை உட்படப் பதினொரு பணியாளர்கள் இக்குழந்தைகள் இல்லத்தில் பணியாற்றுகின்றனர்.

## முதற்கட்டத்திட்டம்

கடந்த ஜுன் 2012ல் முதல் குழந்தை இங்கு சேர்க்கப்பட்டது. தற்போது பத்து குழந்தைகள் இங்கு மறுவாழ்வு பெற்று வருகின்றனர். அவர்களின் ஒரு குழந்தை டௌன்ஸ் சின்ரோம் (Down's Syndrome) குறைபாடுள்ள குழந்தை, மற்றவர்கள் (Mental Retardation with cerebral palsy) பிறவியிலேயே மனவளர்ச்சி குன்றிய மற்றும் உடற்திறன் குறைந்தவர்கள்.

ஒவ்வொரு குழந்தை சேர்க்கப்படும்போதும் தகுந்த மருத்துவர்கள் / மருத்துவமனைகள் உதவியுடன் அனைத்துப் பரிசோதனைகளும் செய்யப்பட்டு, மருத்துவர்களது அறிவுரைப்படி சிகிச்சையளிக்கப்படுகிறது. தரமான உணவு மற்றும் சிகிச்சையால் விரைவில் பலன் கிடைப்பதையும், வியக்கத்தக்க அளவில் குழந்தைகள் தேறி வருவதையும் காண்கிறோம்.

எங்களது வளாகத்திலுள்ள தோட்டத்தில் செயற்கை உரமிடாமல் இயற்கை காய்கறிகளை விளைவிக்கிறோம்.

## இயன்முறை மருத்துவம்

குழந்தைகளுக்குத் தேவையான அடிப்படை இயன்முறை மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் வாங்கப்பட்டு தினமும் மதியம் எமது அனுபவம் வாய்ந்த இயன்முறை மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## சிறப்புப் பள்ளி

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளிக்கான வகுப்பறை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென சிறப்புக் கல்வியில் பட்டம் பெற்ற அனுபவம் வாய்ந்த ஆசிரியை நியமிக்கப்பட்டுள்ளார். எமது சிறப்புப் பள்ளியை அரசு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலம் பதிவு செய்யவிருக்கிறோம். எமது சிறப்புப் பள்ளிக்கு சிவாலயா ஸ்பெஷல் ஸ்கூல் (Shivalaya Special School) எனப் பெயரிட்டுள்ளோம்.

குழந்தைகள் எண்ணிக்கை அதிகமாவதைப் பொறுத்து, பள்ளிக்கென தனிக்கட்டடம் / இணைப்பு கட்டப்படும்.

## திட்டத்திற்கான செலவுகள் / நிதி / நன்கொடை

இதுவரை இக்குழந்தைகள் இல்லத்திற்கான செலவு சுமார் 65 லட்சம் ரூபாய். இதுவரை பொது நன்கொடையோ, பிறரது உதவியோ இல்லாமல் மேலாண்மை அறங்காவலர் அவர்களது சொந்தப் பணத்திலேயே டிசம்பர் 2012 வரை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஜனவரி 2013லிருந்து காசோலையாகவோ, எமது வங்கிக் கணக்கிற்கு நேரடிப் பணப் பரிமாற்றமாகவோ நன்கொடைகள் ஒப்புக் கொள்ளப்பட்டன. நேரடியாகப் பணமாகவோ, பொருளாகவோ எந்த வகையிலும் நன்கொடை பெறுவதில்லை என்று முடிவு செய்துள்ளோம்.

சில நன்கொடையாளர்கள் காசோலை மூலமாகவோ நேரடிப் பணப் பரிமாற்றமாகவோ இந்த மேலான பணிக்கு உதவி செய்துள்ளனர். அவர்களுக்கு எங்கள் நன்றி.

அனைத்து நன்கொடைகளும் வருமான வரிச் சட்டம் 1961ன் 80G (5) (vi) பிரிவின்படி வரி விலக்கப்படுகின்றன.

80G வரி விலக்கு சான்றிதழ் எமது வெப்வைட்டில் உள்ளது. எமது வருமான வரி PAN எண். AACTA 78042.

எவ்வளவு சிறிய நன்கொடையானாலும் ஆசிரம் சேரிடபிள் டிரஸ்ட் என்ற பெயருக்குக் கோயமுத்தூரில் மாற்றத்தக்க காசோலையாகவோ / டிராப்ட் ஆகவோ அனுப்பலாம் அல்லது நேரடியாக எமது வங்கிக் கணக்குக்குப் பணமாற்றம் செய்யலாம்.

## வங்கிக்கணக்கு விபரம்

**Ashram Charitable Trust**

**Account No.67106536657**

**State Bank of Travancore**

**IFSC Code: SBTR0000340**

**Coimbatore 641 045**

தயவுசெய்து மின்னஞ்சல் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ நன்கொடை விவரங்களை எமக்குத் தெரியப்படுத்தினால், உடனே ரசீது தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பப்படும்.

எமது குழந்தைகள் இல்லத்துக்கு வருகை தந்து பார்வையிட்டு உமது நண்பர்கள் / உறவினர்களுக்கு இதுபற்றிச் சொல்வதன் மூலமும் நீங்கள் இக்குழந்தைகளுக்கு உதவலாம். மனதார நீங்கள் செய்யும் இந்த உதவி இம்மேலான பணியில் எங்களுக்குப் பலமும் ஊக்கமும் தரும்.

## <u>வெளிப்படையான செயல்பாடுகள்</u>

எமது திட்டம் வெளிப்படையாகச் செயல்படும் வண்ணம் எமது செயல்பாடுகள் / படிப்படியான வளர்ச்சி / நிதிநிலை அறிக்கை / வரவு-செலவுகள் / நன்கொடையாளர் பட்டியல் ஆகியவை ஒவ்வொரு மாதமும் எமது வெப்சைட்டில் வெளியிடப்படுகிறது.

தங்களது மேலான ஆலோசனைகள் / அறிவுரைகள் வரவேற்கப்படுகின்றன. நாங்கள் உடனடியாக அவற்றுக்குப் பதிலளிக்கக் காத்துக் கொண்டுள்ளோம்.

நன்றி.